NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 25 August 2018

# பிரதமர் லீ: வீவக வீடுகள் வாடகை வீடுகள் அல்ல

வீட்டுடைமை முக்கிய தேசியக் கொள்கையாக விளங்குவதற்கான காரணத்தை பிரதமர் லீ சியன் லூங் விளக்கியுள்ளார். வீட்டு உடைமை ஒவ்வொரு சிங்கப்பூரருக்கும் நாட்டில் ஒரு பங்கைத் தருகிறது. அனைவரது வாழ்க்கையையும் குறிப்பிடத்தக்க அளவு மேம்படுத்தியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

வீடமைப்பு வளர்ச்சிக் கழக வீடுகளுக்கான 99 ஆண்டுகால குத்தகை விவகாரம் பற்றிக் கூறிய திரு லீ, குத்தகை என்பது "நீட்டிக்கப்பட்ட வாடகை, விற்பனை அல்ல" என்ற வாதத்தை மறுத்தார். சிலரது இந்த வாதம் வியப்பாக இருப்பதாகக் கூறிய அவர், பல தனியார் சொத்துகளும் 99 ஆண்டு கால குத்தகையைக் கொண்டிருப்பதைச் சுட்டியதோடு எவரும் அதை வாடகை என்று சொல்வதில்லை என்றும் கூறினார்.

அத்தகைய தனியார் வீட்டு உரிமையாளர்களுக்கு உள்ள எல்லா உரிமைகளும் வீவக குத்தகைதாரர்களுக்கு தங்கள் வீடுகள் மீது உண்டு என்று தேசிய பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழா ஒன்றில் பேசியபோது பிரதமர் கூறினார்.

சொல்லப்போனால், வீவக உரிமையாளர்கள் கூடுதல் சலுகைகளை அனுபவிக்கிறார்கள். ஏனெனில், அவர்களது வீடுகள் பெருமளவிலான அரசாங்க நிதி உதவியுடன் அவ்வப்போது மேம்பாடு காண்கிறது என்றார் அவர்.

> குறைந்த வருமானமுடையவர்கள் உட்பட, ஒவ்வொரு வீட்டு உரிமையாளருக்கும் அவரது பெயரில் குறிப்பிடத் தக்க மதிப்பில் சொத்து இருக்கும். இதனால், சிங்கப்பூரர்கள் அனைவரது வாழ்க்கைத் தரமும் மேம்பட்டுள்ளது. செழிப்பான சமுதாயங்களிலும் காணக்கூடிய ஏழ்மையையும் இல்லாமையையும் தவிர்த்துள்ளோம்.
>
> **பிரதமர் லீ சியன் லூங்**

திரு லீயின் தேசிய தினப் பேரணி உரையில் பரபரப்பான விவகாரமான பொது வீடமைப்புப் பற்றி பேசினார்.

இந்நிலையில், நேற்று இந்த விவகாரம் குறித்து மீண்டும் பேசிய அவர், நாட்டின் பொருளியல் வளர்ச்சியில் பகிர்ந்துகொள்ள வீட்டுடைமைத் திட்டம் வகை செய்கிறது. ஏனெனில், பொருளியல் வளர்ச்சி அடையும்போது வீட்டின் மதிப்பும் உயருகிறது.

வீவக வீடுகளுக்கு 99 ஆண்டுகால குத்தகை இருப்பதன் அடிப்படையான காரணத்தை விளக்கிய திரு லீ, எதிர்காலத் தலைமுறையினருக்கு நாம் நியாயமாக நடந்துகொள்ள வேண்டியது அவசியம் என்றார்.

மேலும் பேசிய அவர், குறைந்த வருமானமுடையவர்கள் உட்பட, ஒவ்வொரு வீட்டு உரிமையாளருக்கும் அவரது பெயரில் குறிப்பிடத்தக்க மதிப்பில் சொத்து இருக்கும் எனக் கூறினார்.

"இதன் விளைவாக, சிங்கப்பூரர்கள் அனைவரது வாழ்க்கைத் தரமும் மேம்பட்டுள்ளது. செழிப்பான சமுதாயங்களிலும் காணக்கூடிய ஏழ்மையையும் இல்லாமையையும் தவிர்த்துள்ளோம்," என்றார் பிரதமர்.

மக்களுக்கு குடியிருப்பு வசதி செய்து தர, வாடகை வீடுகளைக் கட்டுவது, வீடுகளை மானிய விலையில் விற்பது, சான்பிரான்சிஸ்கோவில் உள்ளதைப் போல் கட்டுப்படுத்தப்பட்ட வாடகையை வைத்திருப்பது அல்லது ஹாங்காங்கைப் போல் வீட்டு வசதியை பெருமளவில் தனியார் சந்தையிடம் விட்டுவிடுவது போன்ற வேறு கொள்கைகளைப் பின்பற்றியிருக்கலாம். ஆனால், இது எதுவுமே வீட்டுடமை தருவதைப் போன்ற பொருளியல், சமுதாய விளைவுகளைச் சாதித்திருக்காது என திரு லீ குறிப்பிட்டார்.

தனியார் சந்தை வசதி குறைந்தவர்களுக்கு, நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கும்கூட போதுமான அளவு வீட்டு உடைமையை வழங்காது என்பதை மற்ற நகரங்களின் அனுபவத்திலிருந்து தெரிந்துகொள்ளலாம் என்றார் திரு லீ.

இது குறித்து மேலும் விளக்கிய அவர், சொந்த வீட்டில் இருப்பதை விட வாடகை வீட்டில் வசிப்பது மாறுபட்ட மனப்போக்கை உருவாக்கும். அந்தச் சொத்தை விற்கவோ, தமது பிள்ளைகளுக்கு விட்டுச் செல்லவோ முடியாது என்பதால் மாதா மாதம் வாடகை கொடுத்து வசிப்பவருக்கு சொத்தின் நீண்ட கால மதிப்பில் ஆர்வமிருக்காது. "அது உங்களுடையது அல்ல" என்றார்.

அதுவே, சொந்த வீடு என்றால் வீட்டு உரிமையாளர் தமது சொத்துக்குப் பொறுப்பேற்கிறார். நீண்டகால நோக்கில் சிந்தித்து, அதன் மதிப்பைப் பாதுகாக்க தன்னால் முடிந்தளவுக்கு முயற்சி செய்கிறார் என்று பிரதமர் கூறினார்.

இதனால்தான் குறைந்த வருவாயுள்ள குடும்பங்கள் உட்பட சிங்கப்பூரர்களுக்கு வீவக வீடுகளை விற்கிறது. குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு மானியத்துடன் வாடகை வீட்டைக் கொடுப்பதைவிட, அதிகளவு மானியத்துடன் வீடு களை விற்க விரும்புகிறது என்று பிரதமர் லீ சியன் லூங் தெரிவித்துள்ளார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.